ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# ஐசக் அருமைராசனின் படைப்புக்களில் பண்பாட்டு மரபுகள்

**முனைவர் ஜா. அமிதா டார்வின் & ரா. ஜான்சி ராணி**
**உதவி பேராசிரியர், தமிழ் துறை மற்றும் தமிழாய்வு மையம்,**
**நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம் 629165**
**Email : amithadarwin@gmail.com, jiyanjancy@gmail.com**

**15**

**ஆய்வுச் சுருக்கம்**

குமரிமாவட்டத்தில் நான்கு தலைமுறையைச் சேர்ந்த இலக்கியப் படைப்பாளிகள் புனைகதை எழுத்தில் தங்கள் சிறப்பான பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். இவ்வரிசையில் ஐசக் அருமைராசனும் தனது இலக்கிய எழுத்துலகில் சிறப்பான பங்களிப்பை கொடுத்துள்ளார். ஐசக் அருமைராசனுக்கு கிறிஸ்தவ இலக்கிய வரலாற்றிலும் சிறப்பான ஒரு இடம் உண்டு. இவரது எல்லா படைப்புகளிலும் ஒரு கிறிஸ்தவக் குடும்பமும், அதன் பண்பாட்டு மரபுகளும் தவறாமல் இடம் பெறும். அதிலும் சிறப்பாக கிறிஸ்தவம் வலியுறுத்தும் பண்பாட்டு மரபுகளை ஐசக் அருமைராசனின் படைப்புகள் வலியுறுத்துகின்றன.

**திறவுச்சொற்கள்:** பண்பாடு, கடமைகள், காதல், நம்பிக்கைகள், திருமணம், கலைகள்

**முன்னுரை**

ஒரு மனிதனை மனிதனாக வளர வைப்பதே பண்பாடு ஆகும். மக்களின் அறிவு, நம்பிக்கை, அக வாழ்க்கை, சட்டம், வழக்காறுகள் முதலியவற்றைப் பற்றி கூறுவதே பண்பாடு ஆகும். பண்பாடு பற்றி தி.சு. நடராசர் கூறும்போது "மனிதனுடைய வாழ்நிலைகளில் சாராம்சமாகக் காணப்படுகின்ற ஒழுகலாறுகள், நடத்தைகள், நம்பிக்கைகள், விழுமியங்கள், சுற்றி இருப்பவை பற்றிய உணர்வு நிலைகளை குறிப்பது பண்பாடு ஆகும்" (தி.சு. நடராசன். தமிழின் பண்பாட்டு வெளிகள், ப. 1) என்கிறார்.

ஐசக் அருமைராசன் இயல்பிலேயே பண்பாட்டு மரபியல் சார்ந்த செய்திகளை தனது படைப்புகளில் வெளிப்படுத்துவதில் சிறந்தவர். இவர் தனது எழுத்துலகத்தை பற்றி கூறும்போது, "நாவல் எழுதுவதை மூளைவேலை என்று நினைத்துக் கொண்டு பலரும் அதை ஒரு தொழிலாகச் செய்து கொண்டிருக்கும் போது அதற்கு நேர் எதிராக உணர்வு சம்பந்தத்தோடு கதை எழுத மட்டுமே நமக்கு முடிகிறது" (முன்னுரை, வலியவீடு, ப.5) என்று கூறுகிறார். இதிலிருந்து இவரது படைப்புகளில் பண்பாட்டு மரபியல் சார்ந்த செய்திகள் அதிகம் இடம் பெற்றுள்ளன என்ற முடிவுக்கு வரலாம். இன்று சமூகத்தில் பல குடும்பங்களில் பண்பாட்டு மரபுகள் சிதைந்து காணப்படுகிறது. இதனால் குடும்ப உறவுகளுக்குள் விரிசல்கள் ஏற்பட்டு பல பிரச்சனைகளுக்கு உட்படுவதை இவரது படைப்புகள் நமக்கு உணர்த்துகிறது.

**பண்பாடு**

தனிமனித ஒழுக்கமே பண்பாட்டின் வித்தாகின்றது. மக்களின் அறிவு, ஒழுக்கம், கொள்கை, பண்பு, வாழ்க்கை ஆகியவை மென்மேலும் திருந்திய நிலையே பண்பாடு ஆகும். பண்பாட்டின்

சின்னமாக்க கிராமங்கள் திகழ்ந்தன. இன்று கிராமங்கள் தோறும் சினிமா என்னும் போதை சென்றடைந்து நமது கலாச்சாரப் பெருமைகளான பண்பாடு, பழக்கவழக்கங்கள், இயற்கை முதலானவை அழிந்து கொண்டு இருக்கின்றன.

பண்பாடு என்னும் சொல்லிலிருந்து பண்பாடு என்ற சொல் உருவானதாகும். இதனை ஆ.தட்சணா மூர்த்தி "பயிரிடுவதற்கு ஏற்றவாறு நன்கு செய்யப்பட்ட நிலம் நன்செய் நிலமாகும். அதுவே பண்படுத்தப்பட்ட நிலம் என்றும் சொல்லப்படும். அந்நிலமே நற்பொருள்கள் விளைய இடனாக அமையும் சிறப்பினராகும். பக்குவப்பட்ட மனிதனையும் பண்பட்ட மனிதன் என்போம் பண்பட்ட உள்ளம் உடையோரே பண்பாடு கொண்டவர்கள்" (தட்சிணாமூர்த்தி, ஆ.தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.2) என்கிறார். ஐசக் அருமைராசனின் படைப்புக்களிலும் பண்பாடு பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன.

இவரது "அழுக்குகள்" நாவலில் பணத்திற்கும், பகட்டு வாழ்விற்கும் ஆசைப்பட்டு ஒழுக்கநெறி மீறப்படுகிறது. பெண்களுக்கு கற்புநெறி என்பது பண்பாட்டின் ஒரு கூறாக கருதப்படுகிறது. இதனை இந்நாவலில் காணமுடியவில்லை. சில்லா என்ற பாத்திரம் தனது ஆசைக்காக சமுதாய பண்பாட்டை மீறி வாழ்க்கை நடத்தும் நிகழ்வினைக் கொண்டு இன்றைய சமூகத்தில் வாழும் சில்லா போன்ற பெண்களை மாற்றும் ஒரு சக்தியாக இந்நாவல் அமைந்துள்ளது.

ஐசக் அருமைராசனின் "கல்லறைகள்" நாவலில் பணம்படைத்த அரசியல்வாதிகள், பணக்காரர்கள் நம் நாட்டு பண்பாட்டை மறந்து போதைப்பழக்கத்திற்கும், தகாத உறவுக்கும், வன்முறையிலும் ஈடுபடுவதை தேவசகாயம் என்கின்ற பாத்திரம் மூலம் விளக்குகிறார்.

"தவறான தடங்கள்" என்ற நாவலில் "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற நிலைமாறி பல ஆண்களுடன் உறவு கொண்டு ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து பண்பாட்டை சீரழித்துக் கொண்டிருக்கும் டெய்சி என்ற பாத்திரம் மூலம் சமூகநிலையை உணர்த்துகிறார். மேலும் இந்நிலை இவரது "திசை மாறிய நினைவுகள்" என்ற சிறுகதையிலும் காண முடிகிறது. அதாவது கணவன் செல்வம் வேலைக்கு சென்றபின் மனைவி சுந்தரி பக்கத்துவீட்டு பாஸ்கரனுடன் தகாக உறவு கொள்வதையும், இன்றையச் சமுதாயத்தில் பல குடும்பங்களில் இத்தகைய பண்பாட்டு புறம்பான செயல்பாடுகள் நிகழ்வதை ஆசிரியர் அப்படியே படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

இவ்வாறு ஐசக் அருமைராசனின் புனைகதைகளில் பண்பாட்டைச் சிதைக்க கூடிய வன்முறை, தகாத பாலுறவு, பண ஆசை, நாகரீக மோகம் போன்றவற்றினால் ஏற்படும் பாதிப்பினைப் பற்றி கூறியுள்ளார்.

**காதல்**

காதல் என்பது ஒவ்வோர் உயிருக்குள்ளும் இருக்கின்ற உணர்வாகும். நெஞ்சில் தோன்றும் நுண்ணிய தேன்துளி போன்றது, காதல். இது சங்க காலத்திலும், இக்காலத்திலும் உயர்வு பெற்றே காணப்படுகின்றது. அன்பு, பாசம், நேசம் போன்ற பல்வேறு உணர்வுகளைச் சுவைத்து மகிழும் மனித இனத்தில் காதலும் ஓர் இன்ப உணர்வாகும். அன்பின் அளவற்ற நிலை இருபாலரிடத்தே உருவாவதைக் காதல் என்கிறோம். காதல், மனித வாழ்க்கையில் ஏற்படுத்தும் சிக்கல்களை ஐசக்

அருமைராசனின் படைப்புகளில் காணமுடிகிறது.

ஐசக் அருமைராசனின் “காக்கைகூடு” என்ற சிறுகதையில் குடும்பத்தலைவர் ஆசீர்வாதம் தனது இரண்டு பிள்ளைகளையும் நல்லநிலையில் வாழவைக்க வேணடும் என்று வறுமையோடு போராடுகிறார். ஆனால் அவரது மகள் காதலித்தவனோடு ஓடிப்போகிறாள். இதனை தாங்காது ஆசீர்வாதம் இறந்து போகிறார். காதலால் குடும்பம் சிதைவடைவதை இந்த சிறுகதை மூலம் சமூகத்திற்கு உணர்த்துகிறார்.

மேலும் இவரது அழுக்குகள் நாவலில் உண்மைக் காதல் புற அழுக்கைக் காட்டி மறுக்கப்படுவதை எடுத்துக் கூறுகிறது. அதாவது தங்கமணி என்னும் பாத்திரம் தனது அத்தை மகள் சில்லாவை காதலிக்கிறான் அவளும் காதலிக்கிறாள். ஆனால் பணத்தின் மீது ஆசைக் கொண்டு மனம்மாறி அவனை அழுக்குப் பிடித்தவன் எனக் கூறி வெறுக்கிறாள். இவ்வாறு ஆசிரியா பணம், பகட்டு, அந்தஸ்து இவற்றின் மீது மோகம் கொண்டு உண்மையான அன்பை மறுத்து வாழும் சமூக அவல நிலையினை அவரது படைப்புகளில் எடுத்துக் கூறுகிறார்.

**நம்பிக்கைகள்**

உலகம் தோன்றியது முதல் இன்றுவரை மக்கள் இறை நம்பிக்கையோடு வாழ்கின்றனர். ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் நம்பிக்கை என்பது முக்கியப் பங்கு வகிக்கும் ஒன்றாகக் கருதப்படுகிறது. மனதில் ஆழமான நம்பிக்கையைக் கொண்டு வாழ்கின்றவர்கள் உலகில் எதையும் சாதிக்க முடியும். வாழ்க்கையில் சோதனைகள் மற்றும் வேதனைகள் மூலம் மரணமே வந்தாலும் நம்பிக்கையை மட்டும் இழந்து விடக்கூடாது என்பது ஐசக் அருமைராசனின் சிறுகதைகள் உணர்த்துகின்றன.

ஐசக் அருமைராசனின் புனைகதைகளில் நம்பிக்கை வைத்து வாழ்க்கையில் ஏமாந்து போனவர்கள் நிலை யினை எடுத்துக் கூறுகிறார். அதாவது காக்கைகூடு சிறுகதையில் தந்தை ஆசீர்வாதம் மகள் மீது நம்பிக்கை கொண்டு வரன் பார்க்கிறார். மகளோ தந்தையை ஏமாற்றி காதலனோடு ஓடிப்போகிறாள். இன்றைய இளைய தலைமுறையினர் பெற்றோரின் சொல் கேட்காமல் அவர்களது நம்பிக்கையை ஏமாற்றி தங்களது வாழ்வை சீரழித்துக் கொள்ளும் நிலையினை இதன் மூலம் உணர்த்துகிறார்.

இதற்கு நேர்மாறான ஒரு மனிதனை அவரது தோட்டிகள் சிறுகதையில் காண்கிறோம். அவன் சாதி அடிப்படையில் தோட்டியனாவன் அல்ல. பொருளாதார அடிப்படையில் அந்த தொழிலுக்கு தள்ளப்படுகிறாள். ஆனால் பணியின் மீது நம்பிக்கை வைத்த காரணத்தால் தவறான முறையில் பிறந்த குழந்தை குறித்த தகவலை காவல் நிலையத்திற்கு தெரிவிக்கும் அளவிற்கு உயர்கிறாள்.

மேலும் அழுக்குகள் நாவலில் தங்கமணி சில்லாவின் மீது நம்பிக்கை வைத்து அவளை காதலிக்கிறான். அவளோ பணத்தின் மீது நம்பிக்கை வைத்து அவனை ஏமாற்றுகிறாள். நம்பிக்கை மட்டுமின்றி வாழ்க்கையில் முன்னேற பொறுமையும் ஒரு மனிதனுக்கு இன்றியமையாதது. பொறுமையே நம்பிக்கையின் ஊற்றாகக் கொள்ளலாம். பொறுமையின்றி அவசரமாக எடுக்க்கூடிய முடிவுகளால் தவறுகளே ஏற்படுகின்றது. ஆதலால் பொறுமையும்

நம்பிக்கையும் ஒன்று சேர்ந்தால் தான் வாழ்க்கை செம்மையடையும் என்பதை ஐசக் அருமைராசனின் புனைகதைகளில் காணமுடிகிறது.

**திருமணம்**

குடும்ப வாழ்க்கை சிறப்படைய திருமணம் இன்றியமையாதது ஆகும். ஒரு ஆணும் பெண்ணும் சமய நெறிமுறைகளுக்குட்பட்டு நிலையான வாழ்க்கையைத் தொடங்குவதற்கு முக்கிய காரணமாக அமைவது திருமணம் ஆகும். திருமணம் ஒவ்வொரு குடும்பங்களிலும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்யும் கடமைகளில் முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது. ஐசக் அருமைராசனின் புனைகதைகளிலும் இவ்வாறான திருமண பந்தங்கள் காணப்படுகின்றன. இவர் தனது படைப்புகளில்,

பெற்றோர் நடத்தும் திருமணம்

காதல் திருமணம்

என இரண்டு முறைகளில் திருமணம் பற்றிய செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார்.

**பெற்றோர் நடத்தும் திருமணம்**

ஐசக் அருமைராசனின் படைப்புகளில் பெற்றோர் பார்த்து நடத்தும் திருமணங்கள் பற்றியும், கிறிஸ்தவ முறைபடி நடக்கும் திருமணங்கள் பற்றியும் பேசப்படுகிறது. இவரது “தவறான தடங்கள்“ நாவலில் கிறிஸ்த திருமண ஆராதனை முறைபடி திருமணம் விஜிக்கு நடைபெறுகிறது. திருமணம் முடிந்ததும் மாப்பிள்ளையும், பெண்ணும் மணவறையில் உட்கார்ந்திருக்க, சிறுமியர் பாடல் பாட, மணமக்களை தனி அறையில் உட்கார வைத்து பாலும், பழமும் கொடுக்கப்படுகிறது. பின் திருமணத்தில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் விருந்து படைக்கப்பட்டு, பெண்ணை மாப்பிள்ளையோடு புகுந்த வீட்டுக்கு தாய் தந்தை அறிவுரை கூறி, முத்தம் கொடுத்து அனுப்பி வைக்கும் நிலை காணப்படுகிறது. இதனை ஆசிரியர்,

“கல்யாணம் பத்தரை மணிக்கு முடிந்து பந்தலுக்கு வந்து மணவறையில் மாப்பிள்ளையும் பெண்ணும் உட்கார்ந்திருக்கின்றார்.

கதிரவனே சாட்சியிட

கண்மணி விஜியை

பொன்மணி கரம் பிடித்து

பிடித்த கரம் சாட்சியிட (ஐசக் அருமைராசன், தவறான தட, ப.131) என்று திருமணம் நடந்த நேரத்தையும், சிறுமியர் திருமண வாழ்த்து பாடுவதை பற்றியும் கூறுகிறார்.

“கீறல்கள்” நாவலில் பெற்றோர் தன் பிள்ளைகளுக்குத் தங்களின் கடமைகளில் ஒன்றான திருமணத்தைக் கஷ்டப்பட்டு நடத்தி வைப்பதையும், பிள்ளைகள் தங்களது குடும்ப வாழ்வில் சந்தோஷமாக இருப்பதையும், திருமணத்தின் போது பெற்றோர் அடையும் சிரமத்தையும் பற்றிக் கூறுகிறார்.

“அம்மா எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்துக் கொண்டாள். எவ்வளவு பெரிய கடமையை அப்பா முடித்து விட்டார் என்று நினைத்துக் கொண்டாள். நினைக்க நினைக்க அவளுக்கு வியப்பாய்

இருந்த்து. நம்ப முடியவில்லை" (ஐசக் அருமைராசனின் கீறல்கள், ப. 142) என்ற கூற்றின் மூலம் முத்தையா, பாக்கியம் என்ற தம்பதியினர் தன் இரு பிள்ளைகளுக்கும் தாங்களே வரன் பார்த்து திருமணம் செய்து வைப்பதையும், அதனால் ஏற்படும் மனமகிழ்வையும் பற்றி கூறுகிறார்.

**காதல் திருமணம்**

காதல் திருமணம் என்பது ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் பார்த்து அன்பு கொண்டு பெற்றோருக்குத் தெரியாமல் செய்து கொள்ளும் திருமணம் ஆகும். இத்திருமணம் சமூகத்தில் எல்லாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகக் கருதப்படுகிறது. ஐசக் அருமைராசனின் "காக்கைக் கூடு" என்ற சிறுகதையில் இந்தக் காதல் திருமணம் பற்றி பேசப்படுகிறது.

இக்கதையில் காதல் என்ற கொடிய நோயால் வாழ வேண்டிய குடும்பம் அழிந்து போகும் நிலையினைப் பற்றி கூறுகிறார். அதாவது ஆசீர்வாதம் என்ற தந்தை தன் இரண்டு பிள்ளைகளையும் நல்ல நிலைக்கு கொண்டுவர வேண்டும் என்று நினைத்து தனது வயலை விற்று மகளுக்கு திருமணம் நடத்த நினைக்கிறார். ஆனால் மகளோ தான் காதலித்த காதலுடன் வீட்டை விட்டு ஓடிப்போகிறாள். தந்தை அவமானமும், வருத்தமும் தாங்காமல் மார்பில் அடித்துக்கொண்டு அப்படியே இருந்து போகிறார்.

சமுதாயத்தில் பல குடும்பங்களில் கஷ்டப்பட்டு படிக்கவைத்து, அவர்களது தேவைகள் எல்லாவற்றையும் பார்த்து பார்த்து செய்யும் பெற்றோரை மறந்து பிள்ளைகள் சிறுது காலம் பழகிய காதலனுடன் ஓடிப்போகும் நிலை இன்று பெருகி வருவதை இவரது படைப்புகள் மூலம் அறிய முடிகிறது.

**கைவினைக் கலைகள்**

கைவினைக் கலைகளில் தையல் கலை சிறந்த ஒன்றாக கருதப்படுகிறது. ஏழை பெண்கள் தங்கள் கைவண்மையை காட்டிக் கொள்ளவும், தங்களின் குடும்ப வறுமையைப் போக்கிக் கொள்ளவும், பொழுது போக்கிற்காகவும் வீட்டிலிருந்தபடியே செய்யும் கைவினைக் கலைகளில் இந்த தையல் தொழிலும் ஒன்றாகும். இத்தொழிலானது படிக்காத பாமர மக்களும் எளிய முறையில் வருமானம் ஈட்டிக் கொள்ளவும், தங்களது வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளவும் உதவுகிறது.

ஐசக் அருமைராசனின் படைப்புகளில் "காரணங்களுக்கு அப்பால்" என்ற நாவலில் பெண்களின் கைவினைக் கலையான "குச்சித்தையல்" பற்றி பேசப்படுகிறது. இது குமரிமாவட்டத்தில் கிறிஸ்தவ மிஷனெரிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில் ஆகும். இது இன்று வளர்ச்சி பெற்று உயர்ந்துள்ளது.

**முடிவுரை**

நல்ல சமுதாயத்திற்கு அடிப்படை சிறந்த குடும்பங்களே. அக்குடும்பங்களின் அமைப்பானது பண்பாட்டுச் சிதைவுகள், கருத்து வேற்றுமைகள், திருமணம், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றால் சிதைவுற்றுள்ளன. இந்நிலை மாற ஐசக் அருமைராசனின் படைப்புகள் வழிகாட்டியாக இருந்து தமிழர்களின் வாழ்வினை உயர்வு பெறச் செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை. பண்பாடு உலகெங்கும் இருக்க வேண்டிய மனித இயல்பு. அது மட்டும் வாய்த்து விடின்

தவறான உறவு முறைகளோ, பாலியல் வன்கொடுமைகளோ குடும்பங்களில் சீர்குலைவே உலகில் உருவாவதில்லை. ஐசக் அருமைராசனின் அனைத்து படைப்புகளும் அதாவது ஒரு வகையில் பண்பாட்டு மரபுகளை போற்றி பாதுகாக்க அழைப்பு கொடுப்பதாகவும் அமைந்துள்ளது.

**துணைநூற்பட்டியல்**

1. தி.அ. நடராசன், தமிழின் பண்பாட்டு வெளிகள், அன்னம் வெளியீடு, சிவகங்கை, முதற்பதிப்பு, 1990.
2. ஐசக் அருமைராசன், வலியவீடு, நர்மதா பதிப்பகம், சென்னை, 1993.
3. தட்சிணாமூர்த்தி, ஆ., தமிழ்நாகரிகமும் பண்பாடும், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1966.
4. ஐசக் அருமைராசன், தவறான நடத்தைகள், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1989.
5. ஐசக் அருமைராசன், கீறல்கள், டயோசிசன் புத்தக நிலையம், நாகர்கோவில், முதற்பதிப்பு, 1975.